தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 16, திருவள்ளுவர் ஆண்டு–2050

2019 ஜூலை 1, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்”

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டை ஆகும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் 27–6–2019 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் 1985–1988, 1991–1996, 1996–2001 மற்றும் 2001–2006 ஆகிய ஆண்டுகளில் கிள்ளியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

***48870—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, லாடவரம் ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைத்து இன்று துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நடந்து முடிந்த சட்டமன்ற இடைத் தேர்தலில் ஒன்பது நவ ரத்தினங்கள் சட்டமன்றத்திலே அமர்வதற்காக அரும் பணியாற்றி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இரவு பகல் பாராமல் உழைத்திட்ட